Crl.M.P .No.  70/2024
dt-09.01.2024

புகார்தாரர்– இராதாகிருஷ்ணன்

புகார்தாரரின் பிரமாண வாக்குமூலம்.

சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது.

நான் கீழப்பொட்டல் பட்டியில் குடியிருந்து வருகிறேன். எதிரி இராஜேஸ்வரி தெரியும். கோவிந்தன் மகள் ஆவார். எனக்கு சொந்தமான 26 செண்ட் புஞ்சை நிலத்தை அபகரிக்க வேண்டும் என்று மோசடியாக பத்திர பதிவு செய்துள்ள இராஜேஸ்வரி மீதும் அவருக்கு உடந்தையாக இருந்த சார்பதிவாளர் மீதும் நடவடிக்கை எடுக்க புகார் தாக்கல் செய்துள்ளேன். எனக்கு சொந்தமாக மேற்படி சொத்து இராஜபாளையம் தாலுகா ரெகுநாதபுரம் கிராமத்தில் சர்வே எண். 19/1 ஏ / 1ஏ யில் உள்ளது. அந்த சொத்து 10.05.1983 அன்று இராஜேஸ்வரியின் தகப்பனார் கோவிந்தனும், எனது தாத்தா வையாழிமுத்து என்பவரும் விவசாய நலன் கருதி பரிவர்த்தனை பத்திரம் பதிவு செய்துள்ளார்கள். பரிவர்த்தனை செய்த நாளில் இருந்து 19/1 ல் உள்ள 26 செண்ட் நிலத்தை கடந்த 40 ஆண்டு காலமாக நானே விவசாயம் செய்து வருகிறேன். மேற்படி 26 செண்டில் மாட்டு கால்நடை தீவனத்திற்காக சீமப்புல், அகத்திக்கீரை, சோளநாற்று சாகுபடி செய்து விவசாயம் செய்து வருகிறேன். எனது தாத்தா வையாழிமுத்து கோவிந்தனுக்கு சர்வே நம்பர் 16/5 ல் 31 செண்டு விவசாய புஞ்சை நிலத்தை விட்டுக்கொடுத்துவிட்டு அதற்கு பதிலாக சர்வே நம்பர் 19/1 ல் கோவிந்தன் எனது தாத்தா வையாழிமுத்துவிற்கு 26 செண்ட் புஞ்சை நிலத்தை பரிவர்த்தனை பத்திரம் மூலம் பாத்தியப்படுத்திக் கொடுத்தார். இராஜேஸ்வரியின் தகப்பனார்கோவிந்தன் இறந்த பிறகு மேற்படி 26 செண்ட் நிலம் எனக்கு வேண்டுமென்று என்னுடன் வம்பு வாக்குவாதம் செய்துவந்தார். நான் பரிவர்த்தனை பத்திரம் மூலம் எங்களுக்கு கிடைத்த சொத்து உங்களுக்கு உரிமை இல்லை என்று சொல்லி பரிவர்த்தனை பத்திரத்தையும் அவரிடம் காண்பித்தேன். அந்த பரிவர்த்தனை பத்திரத்தின் ஆவண எண். 908/1983 ஆகும். இராஜேஸ்வரி பத்திரத்தை படித்து பார்த்தார். மேற்படி 26 செண்ட் நிலத்தை எப்படியும் மீட்டு விடுவேன் என்று வர்மம் கொண்டு அலைந்தார். மேற்படி பரிவர்த்தனை பத்திரத்தின் அசல் ஆவணம் கோவிந்தனிடம் தான் இருந்து வந்தது.

இராஜேஸ்வரி 19/1 ல் உள்ள 26 செண்ட் நிலத்தையும் சேர்த்து அவரது அண்ணன், தம்பிகளுக்கு பாகவிடுதலை பத்திரம் பதிவு செய்துள்ளார். எனக்கு ரொம்பநாள் அது தெரியாமல் இருந்தது. 2023 ல் பத்திரம் பதிவு செய்துவிட்டதாக இராஜேஸ்வரி ஊருக்குள் பிரச்சாரம் பண்ணிக் கொண்டிருந்தார். அதற்கு பிறகு நான் வில்லங்கச்சான்று எடுத்துப்பார்த்தேன். அதில் எனக்கு பாத்தியப்பட்ட மேற்படி 26 செண்ட் நிலத்தையும் சேர்த்து இராஜேஸ்வரியின் அண்ணன் தம்பிகளுக்கு பாகவிடுதலை பத்திரம் இராஜேஸ்வரி எழுதி வைத்திருந்தது தெரிந்தது. இராஜேஸ்வரியின் கணவர் ஏற்கனவே பத்திர எழுத்தாளராக வேலை பார்த்து வந்தார். அவருக்கு சார்பதிவாளர் பழக்கமானவர். அதை வைத்துக்கொண்டு சார்பதிவாளர் ஆதாயம் அடைவதற்காக பரிவர்த்தனை பத்திரத்தை மறைத்து வைத்து மோசடியாக பத்திர பதிவு செய்துள்ளார். பத்திரத்தை இரத்து செய்வதற்கு நான் நடவடிக்கை எடுத்தேனா என்றால் மோசடி செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தேன். நடவடிக்கை எடுக்கவில்லை. முதலமைச்சருக்கும் புகார் அனுப்பியிருந்தேன். சார்பதிவாளர் கணினியில் வில்லங்ச்சான்று பார்த்தும், பட்டாவை இணைக்காமலும் அவர் ஆதாயம் அடைவதற்காக தனது அதிகாரத்தை தனியாக தன்னிச்சையாக பயன்படுத்தி பத்திரத்தை பதிவு செய்துள்ளார். எனவே இராஜேஸ்வரி மீதும் சார்பதிவாளர் மீதும் குற்ற நடவடிக்கை எடுக்கும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.